கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.
முன்னிலை – **திரு.எம்.விக்னேஷ் பிரபு, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு.**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள், 18ஆம் நாள் புதன்கிழமை
I.A.No.4/2025 in O.S.No.382/2023

கன்னியம்மாள் . . . மனுதாரர்/பிரதிவாதி

/எதிராக/

பெருமாள்சாமி . . . எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 10.03.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.விஸ்வநாதன் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.அசோக் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 8 விதி 9–ன் படி மனுதாரர் பரம் தாக்கல் செய்யும் கூடுதல் பதிலுரையை ஏற்று வழக்கை மேல்நடத்த உத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

மனுதாரர் மேற்படி மனுவில் மனுதாரர் என்றும், அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், மேற்படி அசல் வழக்கில் மனுதாரர் ஏற்கனவே பதிலுரை தன்னுடைய வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்துள்ளதாகவும், அவ்வாறு மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் இந்த வழக்கிற்கு முன்பு தனக்கு எதிர்மனுதாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு தான் கொடுத்த பதில் அறவிப்பில் சொல்லப்பட்ட அனைத்து சங்கதிகளில் சிலவற்றை தன்னுடைய பதிலுரையில் சொல்லப்பட்ாமல் விடுப்பட்டுவிட்டது என்றும், தான் தற்போது

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.18 18:06:06 +0530

இவ்வழககில் ஏற்கனவே தன் தரப்பில் ஆஜரான வழக்கறிஞரிடமிருந்து இவ்வழக்கின் கோப்பை திரும்ப பெற்றுக்கொண்டு தற்போது வேறு ஒரு வழக்கறிஞரை நியமித்து இவ்வழக்கை நடத்தி வரும் நிலையில் இப்போது உள்ள தன் வழக்கறிஞர் மூலம் தான் ஏற்கனவே அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் விடுப்பட்டுள்ள பல சங்கதிகளை கனம் நீதிமன்றத்தில் கூடுதல் பதிலுரை மூலம் தெளிவாக்கப்படவேண்டும் என தெரிவித்ததின் அடிப்படையில் தான் இம்மனுவை தொடர்ந்து கூடுதல் பதிலுரை தாக்கல் செய்வதற்கு கனம் கோர்ட்டில் அனுமதி வேண்டி தாக்கல் செய்வதாகவும், தான் மேலே குறிப்பிட்டுள்ள சங்கதிகள் உண்மை என்பதினாலும் இத்துடன் தாக்கல் செய்யப்படும கூடுதல் பதிலுரையை கனம் நீதிமன்றத்தில் ஏற்றுக்கொண்டால்தான் தன் தரப்பு நியாயம் நீதிமன்றததில் தெளிவாக்க முடியும் என்றும், எனவே இம்மனுவுடன் தாக்கல் செய்யும் கூடுதல் பதிலுரையை ஏற்று தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி மனுதாரர் பரம் மனு தாக்கல்.

<u>3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம்</u>

மனுதாரரின் மனு பொய்யானது, மோசவிதமானது என்றும், சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும் என்றும், மனுவில் கண்டுள்ள அனைத்து சங்கதிகளை இவ்வெதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கின்றார் என்றும், எதிர்மனுதாரர்/வாதி, மனுதாரர்/பிரதிவாதி மீது கிரைய உடன்படிக்கை ஆவணத்தின்படி கிரைய பாக்கித்த தொகையினை பெற்றுக்கொண்டு சொத்தினை பத்திரப்பதிவு செய்து கொடுக்க வேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்து, அந்த வழக்கில் மனுதாரர் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் மூலமாக நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதன்பின்னர் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து, பின்னர் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் முதல் விசாரணை மேற்கொள்ளப்பட்டு,



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.18 18:06:15 +0530

எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் முதல் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, எதிர்மனுதரர் வாதியை குறுக்கு விசாரணை செய்ய பலமுறை சந்தர்ப்பம் அளிக்கப்பட்டும், மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யாமல் காலம் கடத்தி வந்தனர் என்றும், மேலும் வழக்கானது சமரச தீர்வு மையத்திற்கு அனுப்ப வேண்டும் என்று மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கேட்டுக் கொண்டதன் பேரில் சமரச மையத்திற்கு அனுப்பப்பட்டு, அந்த சமரச மையத்தில் மனுதாரர்/பிரதிவாதி கிரைய அக்ரிமெண்ட்டில் கண்டுள்ள தொகையை வட்டியுடன் பைசல் செய்துவிடுவதாக சமரசம் பேசியபோது எதிர்மனுதாரர்/வாதி கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் கண்டுள்ள ஷரத்துப்படி கிரைய பாக்கித் தொகையை தயாராக உள்ளதாகவும், சொத்தின் கிரையம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டதன் பேரில், மனுதாரர்/பிரதிவாதியோ, கிரைய உடன்படிக்கையில் பெற்றுள்ள முன்பணத் தொகையை தாவாவில் கூறியுள்ளவாறு வட்டியுடன் பைசல் செய்வதாக இருதரப்பிலும் பேசி முடிவெடுக்கப்பட்டதன் பேரில், சமரச மையத்தில் தீர்வு ஏற்படாததால் கனம் நீதிமன்றத்திற்கு வழக்கு அனுப்பப்பட்டுவிட்டது என்றும், இந்நிலையில் மனுதாரர்/பிரதிவாதி கிரைய ஒப்பந்த ஆவணத்தில் கண்டுள்ளபடி முன்பணத்தொகையினை வட்டியுடன் பைசல் செய்வதாகவும் ஒப்புக்கொண்ட பின்னர் தற்போது பொய்யான காரணங்களை கூறி கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய அனுமத வேண்டி மனு தாக்கல் செய்து, அந்த மனுவுடன் ஒரு கூடுதல் பதிலுரையும் தாக்கல் செய்துள்ளார் என்றும், அந்த கூடுதல் பதிலுரையில் 14.08.2020 தேதியன்று வாதி, இப்பிரதிவாதியை அணுகி வெற்று பத்திரத்திலும், வெற்று பேப்பரிலும் கையெழுத்து வாங்கி இப்பிரதிவாதியின் மைனர் மகளிடமும் கையெழுத்து போடவேண்டும் என்று வாதி கேட்டதாகவும், அப்போது வாதி ரூ.1,00,000/- ம் கடன் திருப்பி கொடுக்கும் போது வெற்று பேப்பரிலும், வெற்று பத்திரத்திலும் வாங்கிய கையெழுத்துக்களை அப்படியே திருப்பி கொடுப்பதாக



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.18 18:06:21 +0530

வாதி சொல்லிவிட்டு சென்றார் எனவும், அதன்பின்னர் இப்பிரதிவாதி 24.08.2022 தேதியன்று ரூ.30000/-ம் கூகுல் பே மூலமாக அனுப்பியதாகவும், அதன்பின்னர் ரூ.70000/-த்தை கூகுல் பே மூலம் செலுத்திவிட்டார் என்றும், இந்த விவரங்களை வாதி தாவாவில் மறைத்துவிட்டார் என்றும், வாதியிடம் உள்ள வெற்று பத்திரத்தில் கையெழுத்து மட்டும் பெற்றுள்ளதை போர்ஜரியாக பூர்த்தி செய்து கிரைய ஒப்பந்தமாக மாற்றி ரூ.4,50,000/-ம் முன்பணமாக கொடுத்தாக மோசடியாக கிரைய ஒப்பந்தத்தை தயாரித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக தன்னுடைய கூடுதல் பதிலுரையில் பொய்யான சங்கதிகளை கூறியுள்ளார் என்பது மட்டுமே உண்மை என்றும், இந்த வழக்கின் வாதி தான் பிரதிவாதியிடம் இருந்து சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வெற்று பத்திரத்தினை பயன்படுத்தி கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திவிட்டது போன்று தன்னுடைய கூடுதல் பதிலுரையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தையும் இவ்எதிர்மனுதாரர்/வாதி வன்மையாக மறுக்கின்றார் என்றும், மனுதாரர்/பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்த போதே அனைத்து விவரங்களையும் கூறிவிட்டு சமரச தீர்வு மையத்தில் தீர்வு ஏற்படவில்லை என்பதால் தற்போது தாவாவிற்கு சம்மந்தமில்லாத பொய்யான சங்கதிகளை கூறி வாதியின் பணத்தை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்திலும், சொத்தினை பதிவு செய்து கொடுக்க கூடாது என்ற கெட்ட எண்ணத்திலும் கூடுதல் பதிலுரையில் தவறான சங்கதிகளை கூறி அந்த கூடுதல் பதிலுரையை ஏற்க வேண்டும் என்று தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யப்பட் வேண்டிய ஒன்று என்றும், மனுதாரர்/பிரவிதாதி தாக்கல் செய்துள் இம்மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல்.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவென்றால், இம்மனு

M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.03.18 18:06:31 +0530

அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதியும், எதிர்மனுதாரர் வாதியும் ஆவார். அசல் வழக்கானது வாதியால் பிரதிவாதிக்கு எதிராக ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் வேண்டியும், மாற்று பரிகாரமாக தாவா தொகை வேண்டியும் மற்றும் இதர பரிகாரத்திற்கான வழக்காகும். அசல் வழக்கில் ஏற்கனவே பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர் வாதிக்கு கொடுத்த பதில் அறிவிப்பில் தெரிவித்துள்ள சங்கதிகள் சிலவற்றை ஏற்கனவே வேறு ஒரு வழக்கறிஞர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்படாமல் விடுபட்டுவிட்டது என்றும், அவ்வாறு விடுபட்ட சங்கதிகளை கூடுதல் எதிர்வழக்குரையாக மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்வதை ஏற்று அசல் வழக்கினை மேல்நடத்திட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கின் விசாரணையை இடையூறுப்படுத்தும் வகையில் மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையில் ஏற்கனவே சமரச தீர்வு மையத்தில் தீர்வு ஏற்படவில்லை என்பதால் தற்போது தாவாவிற்கு சம்மந்தமில்லாத பொய்யான சங்கதிகனை கூறி வாதியின் பணத்தை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்திலும், சொத்தினை பதிவு செய்து கொடுக்க கூடாது என்ற கெட்ட எண்ணத்திலும் கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார் என்றும் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிக்கு கொடுத்த

M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.03.18 18:06:37 +0530

பதிலறிவிப்பு வா.சா.ஆ.3 ஆக வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி கூடுதல் எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ள சங்கதிகள் வா.சா.ஆ.3 பதிலறிவிப்பில் உள்ளது. அந்த வகையில் மனுதாரர் தரப்பில் புதிய சங்கதிகளைக் கொண்டு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்பதும் ஏற்கனவே பதில் அறிவிப்பில் தெரிவித்துள்ள சங்கதிகளை அனுசரித்தே கூடுதல் எதிர்வழக்குரையினை தாக்கல் செய்துள்ளார் என்பது மிகத்தெளிவாக தெரியவருகிறது. மனுதாரர் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்பதால் வழக்கின் தன்மையிலும், பரிகாரத்திலும் எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. மனுதாரரின் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை. அசல் வழக்கானது வ.சா.1ன் குறுக்குவிசாரணைக்காக நிலுவையில் இருந்து வருவதாலும், மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்புடையதாக உள்ளதாலும், அசல் வழக்கில் பலதரப்பட்ட இடைக்கால மனுக்கள் தாக்கல் செய்வதை தவிர்த்திடும் பொருட்டும், அசல் வழக்கினை விரைந்து முடித்திடும் பொருட்டும் மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்று அசல் வழக்கினை மேல்நடத்திட அனுமதிக்க வேண்டும் என்று தாக்கல் செய்துள்ள இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது செலவுதொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.18 18:06:47 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.18 18:06:53 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.